## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி சாதாரண கூட்டம் திருவள்ளுவர் ஆண்டு 2053 துலை மாதம் ஐப்பசி மாதம் 25 ஆம் தேதி 2022-ம் ஆண்டு **நவம்பர் மாதம் 11ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில்** நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**திரு.தி.ஜனார்த்தனன்,**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.31117/2021/CFC நாள்.14.10.2022ல் 15வது மத்திய நிதிக்குழு மானியம் 2021–2022ன் (Untied Grant) கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிதாக தெரு விளக்குகள் (LED விளக்கு) பொருத்துதல் மற்றும் புதிதாக முறைப்படுத்தப்பட்ட, அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் விடுபட்ட இடங்களில் ஏற்கனவே உள்ள மின்கம்பத்தில் மின்கம்பி அமைத்து புதிதாக தெருவிளக்குகள் (LED விளக்கு) பொருத்துதல் பணிக்கு (Light fittings with EB line) ரூ.22.50 இலட்சத்திற்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்தும், தெருவிளக்குகளை கொள்முதல் செய்து கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | 15th CFC 2021-22 மானிய தொகை (ரூ இலட்சத்தில்) | நகராட்சியின் பங்களிப்பு பொது நிதி (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிதாக தெரு விளக்குகள் (LED விளக்கு) பொருத்துதல் பணி | 22.50 | 22.00 | 0.50 |

எனவே மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1162/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.174**

**<u>பொருள் எண்.2</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் குடிநீர் நிதி 2022 -2023ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Chlorination Plant வருடாந்திர பராமரிப்பு செய்தல் பணிக்காக 19.10.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பவானிசாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Chlorination Plant வருடாந்திர பராமரிப்பு செய்தல் பணி | 1.70 இலட்சம் | ஐ டெக் சிஸ்டம்ஸ், ஈரோடு | 0.12% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | கம்பேன் இன்டர்நேஷனல் | 1.35% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.12% குறைவாக வழங்கியுள்ள ஐ டெக் சிஸ்டம்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
**(ந.க.எண்.1585/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.175**

**<u>பொருள் எண்.3</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் குடிநீர் நிதி 2022 -2023ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஏழு எண்ணிக்கைகள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் அளவுமானி பொருத்துதல் மற்றும் i Tank என்னும் செயலியினை செயல்முறைப்படுத்துதல் பணிக்காக 19.10.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஏழு எண்ணிக்கைகள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் அளவுமானி பொருத்துதல் மற்றும் i Tank என்னும் செயலியினை செயல்முறைப்படுத்துதல் பணி | 4.85 இலட்சம் | Real Tech Systems, Erode | 0.10% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Aqua Stream Systems, Chennai | 2.00% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.10% குறைவாக வழங்கியுள்ள Real Tech Systems, Erode அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1607/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**

**தீர்மான எண்.176**

**பொருள் எண்.4**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் குடிநீர் நிதி 2022 -2023ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.04, சுல்தான் ரோடு, வார்டு எண்.12, காந்திநகர் மற்றும் வார்டு எண்.14, தங்கசாலை தெரு, நகராட்சி அலுவலகத்தில் உள்ள திறந்தவெளி கிணற்றில் அதிக அளவில் வளர்ந்துள்ள செடி கொடிகளை அகற்றி தூர்வாருதல், கிணற்றினை சுற்றி பூச்சு வேலை மேற்கொள்ளுதல் மற்றும் கிணற்றின் மேல் பகுதியை இரும்பு மூடி கொண்டு மூடுதல் (கிரில்) பணிக்காக 19.10.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.04, சுல்தான் ரோடு, வார்டு எண்.12, காந்திநகர் மற்றும் வார்டு எண்.14, தங்கசாலை தெரு, நகராட்சி அலுவலகத்தில் உள்ள திறந்தவெளி கிணற்றில் அதிக அளவில் வளர்ந்துள்ள செடி கொடிகளை அகற்றி தூர்வாருதல், கிணற்றினை சுற்றி பூச்சு வேலை மேற்கொள்ளுதல் மற்றும் கிணற்றின் மேல் பகுதியை இரும்பு மூடி கொண்டு மூடுதல் (கிரில்) பணி | 4.00 இலட்சம் | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 0.15% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 1.50% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.15% குறைவாக வழங்கியுள்ள திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1610/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**

**தீர்மான எண்.177**

பொருள் எண்.5

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் குடிநீர் நிதி 2022 -2023ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5, பன்னீர்செல்வம் தெரு, வார்டு எண்.8, மறைமலையடிகள் தெரு, வார்டு எண்.9, சொக்கப்பா தெரு மற்றும் வார்டு எண்.11, பாரதி தெருவில் உள்ள திறந்தவெளி கிணற்றில் அதிக அளவில் வளர்ந்துள்ள செடி கொடிகளை அகற்றி தூர்வாருதல், கிணற்றினை சுற்றி பூச்சு வேலை மேற்கொள்ளுதல் மற்றும் கிணற்றின் மேல் பகுதியை இரும்பு மூடி கொண்டு மூடுதல் (கிரில்) பணிக்காக 19.10.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5, பன்னீர்செல்வம் தெரு, வார்டு எண்.8, மறைமலையடிகள் தெரு, வார்டு எண்.9, சொக்கப்பா தெரு மற்றும் வார்டு எண்.11, பாரதி தெருவில் உள்ள திறந்தவெளி கிணற்றில் அதிக அளவில் வளர்ந்துள்ள செடி கொடிகளை அகற்றி தூர்வாருதல், கிணற்றினை சுற்றி பூச்சு வேலை மேற்கொள்ளுதல் மற்றும் கிணற்றின் மேல் பகுதியை இரும்பு மூடி கொண்டு மூடுதல் (கிரில்) பணி | 4.00 இலட்சம் | திருமதி.புனிதவதி, நொச்சிக்குட்டை | 0.13% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 1.50% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.13% குறைவாக வழங்கியுள்ள திருமதி.புனிதவதி, நொச்சிக்குட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1611/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.178**

**பொருள் எண்.6**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2022 -2023ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் கணினிகள் மற்றும் பிரிண்டர் கொள்முதல் செய்தல் பணிக்காக 19.10.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் கணினிகள் மற்றும் பிரிண்டர் கொள்முதல் செய்தல் பணி | 2.00 இலட்சம் | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 0.11% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 2.00% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.11% குறைவாக வழங்கியுள்ள திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1584/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.179**

**பொருள் எண்.7**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2022 -2023ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04, 09, 10, 12, 15 மற்றும் 18 ஆகிய வார்டுகளில் உள்ள பழுதடைந்த சிறுபாலங்களை சீரமைத்தல் பணிக்காக 19.10.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04, 09, 10, 12, 15 மற்றும் 18 ஆகிய வார்டுகளில் உள்ள பழுதடைந்த சிறுபாலங்களை சீரமைத்தல் பணி | 4.80 இலட்சம் | திருமதி.புனிதவதி, நொச்சிக்குட்டை | 0.15% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 2.00% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.15% குறைவாக வழங்கியுள்ள திருமதி.புனிதவதி, நொச்சிக்குட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1587/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.180**

**<u>பொருள் எண்.8</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2022 -2023ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லை ஆரம்பம் மற்றும் எல்லை முடிவு என எட்டு இடங்களில் பெயர் பலகை அமைத்தல் மற்றும் தெரு பெயர் குறிப்பிட்டுள்ள பெயர் பலகைகளில் ஏற்கனவே ஒட்டப்பட்ட கிழிந்த ஸ்டிக்கர்களை மாற்றி அமைத்தல் பணிக்காக 19.10.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லை ஆரம்பம் மற்றும் எல்லை முடிவு என எட்டு இடங்களில் பெயர் பலகை அமைத்தல் மற்றும் தெரு பெயர் குறிப்பிட்டுள்ள பெயர் பலகைகளில் ஏற்கனவே ஒட்டப்பட்ட கிழிந்த ஸ்டிக்கர்களை மாற்றி அமைத்தல் | 4.80 இலட்சம் | V-PRATHI CONSTRUCTIONS, சத்தியமங்கலம் | 0.12% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 2.00% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.12% குறைவாக வழங்கியுள்ள V-PRATHI CONSTRUCTIONS, சத்தியமங்கலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1586/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.181**

## பொருள் எண்.9

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2022 -2023ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, நுண்ணுயிர் உரமாக்கல் மையத்தில் சேகரிக்கப்படும் மக்கும் கழிவுகளை உலர்த்தி அரைப்பதற்கு ஏதுவாக தளம் அமைத்தல் பணிக்காக 19.10.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, நுண்ணுயிர் உரமாக்கல் மையத்தில் சேகரிக்கப்படும் மக்கும் கழிவுகளை உலர்த்தி அரைப்பதற்கு ஏதுவாக தளம் அமைத்தல் பணி | 4.50 இலட்சம் | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 0.14% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 2.00% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.14% குறைவாக வழங்கியுள்ள திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1608/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**

**தீர்மான எண்.182**

## பொருள் எண்.10

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2022 -2023ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலக வளாகத்தைச் சுற்றி படர்ந்துள்ள செடி கொடிகளை அகற்றுதல், நகராட்சி அலுவலகத்தின் பின்புறம் உள்ள கேட் மற்றும் அலுவலக கழிப்பிடம் மராமத்து பணி மேற்கொள்ளுதல் மற்றும் நகர்மன்ற கூட்ட அரங்கில் மைக் பழுது சரி செய்தல் பணிக்காக 19.10.2022 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலக வளாகத்தைச் சுற்றி படர்ந்துள்ள செடி கொடிகளை அகற்றுதல், நகராட்சி அலுவலகத்தின் பின்புறம் உள்ள கேட் மற்றும் அலுவலக கழிப்பிடம் மராமத்து பணி மேற்கொள்ளுதல் மற்றும் நகர்மன்ற கூட்ட அரங்கில் மைக் பழுது சரி செய்தல் பணி | 4.80 இலட்சம் | திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி | 0.13% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.வி.ஜெயராஜ், பு.புளியம்பட்டி | 2.00% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.13% குறைவாக வழங்கியுள்ள திரு.சிதம்பரம், பு.புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1609/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.183**

**<u>பொருள் எண்.11</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள பயன்பாடின்றி இருக்கும் குப்பை தொட்டிகள் (Dumber Bins) – 27 எண்ணிக்கைகள், தள்ளுவண்டிகள் (Push Carts) - 17 எண்ணிக்கைகள், விளம்பர பலகை ஸ்டேண்டு – 3 எண்ணிக்கைகள் மற்றும் Portable Toilet Cabin – 3 எண்ணிக்கைகள் அனைத்தும் 19.10.2022 ஆம் தேதியன்று பொது ஏலம் விடப்பட்டது. இந்நிலையில் பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரியவர்களின் விபரங்கள் மற்றும் ஏலத்தொகை பின்வருமாறு

| வ.எண் | ஏலதாரரின் விபரம் | உயர்ந்தபட்ச ஏலத்தொகை |
|---|---|---|
| 1 | திரு.N.லோகநாதன்,33, பெரியார் நகர்,கோவை. | ரூ.95,000/– |
| 2 | திரு.சிதம்பரம், 1/63B, குட்டகம்,திருப்பூர். | ரூ.94,500/– |
| 3 | திரு.C.ஸ்ரீமுருகன், 3/136–1, ஜவஹர் தெரு, பு.புளியம்பட்டி. | ரூ.94,000/– |
| 4 | திரு.D.கனகராஜ், 277B, KNG புதூர், கோவை. | ரூ.93,000/– |

மேற்படி பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக ரூ.95,000/– கோரியுள்ள திரு.N.லோகநாதன், கோவை அவர்களின் ஏலத்தொகையை ஏற்று பணி ஆணை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
**(ந.க.எண். 1586 /2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.184**

**<u>பொருள் எண்.12</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலாக காணப்படுகிறது. இருப்பினும் இந்நகராட்சி பகுதியில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வாயிலாக

திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் முற்றிலும் தடுக்கப்படும் வரை இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர் மன்ற தீர்மான எண்.125 நாள்.29.05.2020ன் படி டெங்கு காய்ச்சல் தொற்று நோய் தடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை தொடர்ந்து 01.12.2022 முதல் 31.12.2022 வரை திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இப்பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.447/2017/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.185**

**பொருள் எண்.13**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக நான்கு நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், இப்பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் 01.11.2022 முதல் 30.11.2022 வரை ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 30.11.2022 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.12.2022 முதல் 31.12.2022 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ளவும், மேலும் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணி (AMRUT 2.0) மேற்கொள்ளப்படவுள்ளதால் மேற்கண்ட 4 பணியாளர்களுடன் கூடுதலாக 2 பணியாளர்களை பணியமர்த்தி கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க. எண்.387/2017/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.186**

**பொருள் எண்.14**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 6 வார்டுகளில் 41 தூய்மை பணியாளர்கள் விபிஎன் பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4861/P3/2018 நாள்.28.02.2018 அனுமதியின் படி ஆணையர்

அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.06.06.2019ன் படி பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.30.06.2019ன் படி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.04.2022 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஒரு மாதம் (01.11.2022 முதல் 30.11.2022 வரை) பணியினை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மேலும் ஒரு மாதம் (01.12.2022 முதல் 31.12.2022 வரை) விபிஎன் பில்டர்ஸ், திருப்பூர் ஒப்பந்ததாரர் அவர்களை பணி செய்ய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.25/2016/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.187**

<u>பொருள் எண்.15</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள மிதி வண்டி மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி உள்ள காலத்திற்கு 20.10.2022–ஆம் தேதியன்று குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், கீழ்க்கண்ட விபரப்படி உள்ள நபர்கள் கலந்து கொண்டார்கள். ஒப்பந்தப்புள்ளி எவரும் வழங்கவில்லை. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | உரிமம் விவரம் | மறு ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்ட ஏலதாரர்களின் பெயர் | அரசு மதிப்பு தொகை ரூ. | மறு ஏலத்தில் கேட்கப் பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி தொகை ரூ. | மூடி முத்திரை யிடப் பட்ட வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளியின் உயர்ந்த ஏல கேள்வி | குத்தகை காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | புன்செய் புளியம்பட்டி நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள மிதி வண்டி மற்றும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் சுங்கம் வசூலிக்கும் உரிமம். | திரு. ஏ. ரவிச்சந்திரன் | 400000/– | 405008/– | ஒப்பந்தப் புள்ளி ஏதும் வரவில்லை | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு |
| 2 | | திரு.டி. மோகன்குமார் | | 402000/– | | |

**(ந.க.எண்.1308/2014/அ1)**

**அலுவலகக்குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) கொரோனா நோய் தொற்று காலத்திற்கு பின்பு நகராட்சி பேருந்து நிலையத்தை சுற்றி தனியார் வாகனம் நிறுத்துமிடம் அதிக எண்ணிக்கையில் செயல்பட்டு வருகிறது. மேலும், பேருந்துகள் வரத்து குறைவாக காணப்படுகிறது. மேலும், மேற்படி குத்தகை இனத்தை பிப்ரவரி 2021 முதல் 13 முறை தொடர்ந்து மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில், இதுநாள் வரை ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. இதனால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்ட வண்ணமாக உள்ளது. தற்போது 14–வது முறையாக 20.10.2022–ம் தேதியன்று நகர் மன்ற தீர்மானம் எண்.155 நாள் 30.09.2022–ன் படி அரசு மதிப்பாக ரூ.4,00,000/–ம் என நிர்ணயிக்கப்பட்டு, குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில், இரு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். அதில், திரு. எ.ரவிச்சந்திரன் என்பவர் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியாக ரூ.4,05,008/– கோரியுள்ளார். எனவே நகராட்சியின் தொடர் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியை ஏற்றுக் கொண்டு அன்னார்க்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு அனுமதிக்கவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.188**

**<u>பொருள் எண்.16</u>**

ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் அவர்கள், 2016–2017–ஆம் ஆண்டு பொது சுகாதார பணிக்காக டெண்டர் எடுக்க செலுத்திய வைப்புத்தொகை ரூ.55,000/– (ரூபாய் ஐம்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) 26.02.2016–ஆம் தேதி செலுத்தியுள்ளார். அன்னாரின் டெண்டர் காலம் முடிவடைந்துவிட்டதால் அவர் செலுத்திய வைப்புத்தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்படி வைப்புத்தொகையானது காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் 2015–2016–ம் ஆண்டு, வால்யூம் நெ.3, பக்கம் எண்.11, வரிசை எண்.111–ல் உள்ள தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1774/2022/அ1)**
**அலுவலகக்குறிப்பு :-**
அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.189**

**<u>பொருள் எண்.17</u>**

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், குரும்பபாளையம் கிராமம் சர்வே எண்.355/1ல் உள்ள பு.ஹெ.1.20.00 அரசு புறம்போக்கு நிலத்தினை, புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதிகளில் உருவாகும் திடக்கழிவுகளை செயல்முறைபடுத்த வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களிடம் இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் கடித ந.க.எண்.736/2021/இ1 நாள்.24.05.2022ன் வாயிலாக கேட்டுக்கொண்டதற்கினங்க மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.20161/2022/உ2 நாள்.25.06.2022ன் படி மேற்படி சர்வே எண்ணில் அமைந்துள்ள பு.ஹெ.1.20.00 அரசு புறம்போக்கு நிலத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு முன்நுழைவு அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே தூய்மை இந்தியா திட்டம் 2018-2019

ஆம் ஆண்டு திட்டத்தில் வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் நுண்ணுயிரி உரமாக்கல் மையம் கட்ட உத்தேசிக்கப்பட்ட இடத்திற்கு மாற்றாக, தற்போது ஒப்படைக்கப்பட்ட இடத்தில் நுண் உரமாக்கல் மையம் அமைக்க ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.53.60இலட்சத்திற்கு பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.263/2018/இ1)**

**அலுவலக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**

**தீர்மான எண்.190**

**பொருள் எண்.1**

புன்செய்ப் புளியம்பட்டி கூட்டுறவு பண்டக சாலை லிமிடெட்., நெ.கே.1008 கடந்த 30.08.1946 முதல் செயல்பட துவங்கி 75 ஆண்டுகள் ஆகிறது. தற்போது 2427 பேர் உறுப்பினர்களாக உள்ளார்கள். இப்பண்டக சாலையானது கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இலாபத்தில் நன்கு செயல்பட்டு வருகிறது. இப்பண்டக சாலையானது புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் தமிழ்நாடு அரசின் பொது விநியோக திட்டத்தின் கீழ் 8 முழு நேர நியாயவிலை கடைகளும் 2 பகுதி நேர நியாயவிலை கடைகளும் மூலம் சுமார் 8000 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்து வருகிறது.

புன்செய்ப் புளியம்பட்டியை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு மேற்கண்ட பணிகளை மேற்கொண்டு வரும் இப்பண்டக சாலைக்கு புன்செய்ப் புளியம்பட்டியில் சொந்தமாக இடமோ, கட்டிடமோ இல்லாத காரணத்தால் கடந்த 75 ஆண்டுகளாக பண்டகசாலை தலைமையிடம், மளிகை பிரிவு, கிடங்கு, நியாயவிலை கடைகள் மற்றும் பொது சேவை மையம் ஆகிய அனைத்தும் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட அனைத்தும் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் செயல்படுவதால் கட்டிட வாடகையானது மாதம் ஒன்றிற்கு ரூ.34,000/– வீதம் பண்டகசாலையால் செலுத்தப்பட்டு வருகிறது. இதனால் பண்டகசாலை ஈட்டும் வருவாயில் வாடகைக்கு பெரும்தொகை செலுத்தப்பட்டு வருவதால் இலாபம் கணிசமாக குறைந்து வருகிறது.

பண்டக சாலைக்கு சொந்தமாக நிலமோ, கட்டிடமோ தனியாரிடம் வாங்குவதற்கு போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் பண்டகசாலை சொந்தமாக தலைமை அலுவலகம், கிடங்கு, நியாயவிலை கடைகள் ஆகியவற்றிற் தேவையான கட்டிடங்கள் கட்டவும், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி எல்லைக்குட்பட்ட கிராம நிர்வாக அலுவலகம் வடபுறம் சர்வே எண்.242/5–ல் 7.50சென்ட் காலியிடத்தினை புன்செய்ப் புளியம்பட்டி கூட்டுறவு பண்டக சாலை லிமிடெட்., நெ.கே.1008–க்கு ஒதுக்கீடு செய்து தரக்கோரி 12.09.2022ம் தேதி நடைபெற்ற நிர்வாகக்குழு கூட்டத்தில் தீர்மான எண்.4–ன் மூலம் தீர்மானம் நிறைவேறப்பட்டு அதனடிப்படையில் மேற்கண்ட பண்டகசாலையின் தலைவர் அவர்கள் கடிதம் வழங்கியுள்ளார். மேலும் புன்செய்ப் புளியம்பட்டி கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட்., நெ.கே.1008–ன் தலைவர் அவர்கள் மேற்படி நிலத்திற்கு உரிய அரசு வழிகாட்டும் மதிப்பிலான தொகையை இந்நகராட்சிக்கு செலுத்துவதாக தெரிவித்துள்ளார். எனவே மேற்கண்ட நகராட்சிக்கு சொந்தமான இடத்தை புன்செய்ப் புளியம்பட்டி கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட்., நெ.கே.1008–க்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அரசாணை எண்.730 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்.14.04.1976ல் கூறியுள்ள வழிகாட்டுதலின்படி மேல்நடவடிக்கை எடுக்க மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**
**தீர்மான எண்.191**

<u>பொருள் எண்.2</u>

பி ஜி 1 நொச்சிக்குட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட் கடந்த 1993ஆம் ஆண்டு முதல் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட ஜவஹர் மெயின் ரோட்டில் வாரச்சந்தைக்கு எதிர்புறம் 10X16அடி அளவுள்ள வாடகைக்கட்டிடத்தில் இயங்கி வருகிறது. புன்செய்ப் புளியம்பட்டி வருவாய் கிராமத்திற்குட்பட்ட கோவில்புதூர், நொச்சிக்குட்டை, என்.ஆலம்பாளையம், நல்லகாளிபாளையம் ஆகிய கிராமங்களை சேர்ந்த விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதியை சேர்ந்த விவசாயிகள், பொதுமக்களும் இச்சங்கத்தில் 4000 பேர் உறுப்பினர்களாக சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர்.

இச்சங்கத்தில் 60க்கும் மேற்பட்ட சுய உதவிக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றனர். இச்சங்கத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்கடன்கள், விவசாயிகளுக்கு பயிர்கடன்கள், சிறு வணிகக்கடன், நகைக்கடன், டாம்கோ, டாப்செட்கோ, அரசு நலத்திட்ட கடன்கள், இதர கடன்கள் ரூ.7.00 கோடி அளவில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பொதுமக்களிடமிருந்து சேமிப்பு மற்றும் வைப்புகள் மூலம் ரூ.3.00 கோடி பெறப்பட்டுள்ளன. நகைக்கடன்கள் வழங்கியதில் 500 நபர்களின் ரூ.6.00 கோடி மதிப்புள்ள நகைகள் சங்க பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்கள் எளிதாக அனைத்து வகையான சான்றிதழ்கள் பெறவும், இணையவழிச் சேவைகளை பெறவும், தமிழக அரசால் அனுமதிக்கப்பட்ட இ–சேவை மையம் செயல்பட்டு வருகிறது.

மேலும் சங்கத்திற்கு தினசரி வரவு–செலவு மேற்கொள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் பொது சேவை மையத்திற்கு சான்றிதழ்கள் பெற தினசரி சுமார் 100 நபர்களுக்கு மேல் வந்து செல்கின்றனர். இவர்கள் சேவை பெற காத்திருக்கவும், அமரவும் இடமின்றி மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர் என பி ஜி 1 நொச்சிக்குட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 30.09.2022ம் தேதி நடைபெற்ற நிர்வாகக்குழு கூட்டத்தில் தீர்மான எண்.10–ன் மூலம் தீர்மானம் நிறைவேறப்பட்டு அதனடிப்படையில் தலைவர், பி ஜி 1 நொச்சிக்குட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட், புன்செய்ப் புளியம்பட்டி அவர்கள் கடிதம் வழங்கியுள்ளார்.

மேலும் தலைவர் அவர்களின் கடிதத்தில் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஜவஹர் மெயின் ரோட்டிற்கு மேற்புறம், சட்டமன்ற அலுவலகத்திற்கு தென்புறம், கால்நடை மருத்துவமனைக்கு கிழபுறம் கிழமேல் ரோட்டிற்கு வடறம் அமைந்துள்ள க.ச.எண்.46/3 சாலையில் கிழமேல் சுமார் 65.50அடி மற்றும் தென்வடல் 56.00அடி அளவுள்ள 8.40 செண்ட் இடத்தை மேற்படி சங்கத்திற்கு புதிதாக கட்டிடம் கட்டிக்கொள்ள வழங்குமாறும், மேலும் மேற்படி இடத்திற்கு உரிய அரசு வழிகாட்டும் மதிப்பிலான தொகையை செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளார். எனவே மேற்கண்ட நகராட்சிக்கு சொந்தமான இடத்தை பி ஜி 1 நொச்சிக்குட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்–க்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அரசாணை எண்.730 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்.14.04.1976ல் கூறியுள்ள வழிகாட்டுதலின்படி மேல்நடவடிக்கை எடுக்க மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**
**தீர்மான எண்.192**

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.